முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.02.02.2026

O.S. No. 93/2015

பி.வா,சா-1 சண்முகநாதன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் அனைத்து பிரதிவாதிகளுக்காவும் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. 1ம் பிரதி எனது அம்மா வேலம்மாளும் சங்கரம்மாளும் எனது பெரியம்மா ஆவர்.வேலம்மாளின் குடும்பம் கேரளா திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார் என்றால் சரி வேலம்மாளின் கணவர் முத்துசாமி ஆவர். 6ம் பிரதி வெளிநாட்டில் உள்ளார் 7,8ம் பிரதி எர்ணாகுளத்தில் உள்ளார் 9 முதல் 12 பிரதிகள் தூத்துகுடி மாவட்டம் திருச்செந்தூரில் வசித்து வருகிறார்கள். 13ம் பிரதி எனது அப்பா ஆவார். இவர்கள் அனைவரும் அவர்களுக்காக சாட்சியம் அளிக்கஎனக்கு பவர் கொடுத்தார்களா என்றால் இல்லை. எழுத்து முலமான கடிதம் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. 2 முதல் 4 பிரதிகளும் 13ம் பிரதியும் என்னுடைய குடும்பத்தை சேர்ந்தவர்கள். அதிகாரம் கொடுத்தார்களா என்றால் இல்லை. வழக்கு சொத்தானது மீனாட்சிபுரம் பகுதியில் உள்ளது. மீனாட்சிபுரம் பிரதான சாலையில் இருபுறமும் நகைகடைகள் உள்ளது என்றால் சரி. நகைகடைகள் வந்த பிறது அந்த பகுதியில் நிலத்தின் மதிப்பு உயர்ந்து விட்டது என்றால் சரி. நான் அரிசி வியாபாரமும் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்கிறேன் என்றால் சரியல்ல. அரிசி வியாபாரம் மட்டும் செய்கிறேன். 2013க்கு முன்பாக சொத்து சம்பந்தமாக மீனாட்சிபுரம் பகுதியை சேர்ந்த யார் வந்து பார்த்தார்கள் என்றால் யாரும் பார்க்கவில்லை. மூத்த பெரியம்மா சங்கரம்மாளுக்கு 1968ல் திருமணம் என்றால் தெரியாது. வேலம்மாள் பெரியம்மாக்கு 1971ல் திருமணம் என்றால் தெரியாது. எனது அம்மாவிற்கு 1981ல் திருமணம் என்றால் தெரியாது. எனது

அண்ணன் பாலசுப்ரமணியத்திற்கு 43 வயது ஆகிறது. எனது அம்மா பெரியம்மா ஆகியோருக்கு திருமணம் முடிந்து அவர்கள் புகுந்த வீட்டில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரி. எனது பாட்டி பிரம்மு அம்மாளும் 1ம் வாதி இசக்கியும் வழக்கு சொத்து வீட்டில் குடியிருந்தார்கள் என்றால் சரி. மீனாட்சிபுரம் பிரதான சாலையில் கிழக்கு பக்கம் 10 அடி துாரத்தில் உள்ள தோப்புவணிகர் தெருவில் வழக்கு சொத்து வீடு உள்ளது என்றால் சரி. அந்த தெருவில் நகைகடைகள் தவிர சிறு தொழில் செய்யும் நபர்களும் உள்ளார்கள் என்றால் எங்கள் வீட்டிற்கு அருகில் இல்லை சிறிது துாரத்தில் உள்ளார்கள். வழக்கு பட்டிகை சொத்தை எனது பாட்டி உயிருடன்ம இருக்கும்போது சிறு சிறு பகுதியாக பிரித்து வாடகைக்கு விட்டு வாடகை வாங்கி அனுபவித்து வந்தார் என்றால் சரி. எனது பாட்டி 2004 ல் இறந்தார் என்றால் வருடம் நினைவில்லை. 2004 க்க பிறகு எனது மாமா இசக்கி வாடகை வாங்கி அனுபவித்து வந்தார் என்றால் சரி. இசக்கியின் மூத்த மகள் 3ம் வாதியின் திருமணமானது பட்டிகை வீட்டில் நடந்தது என்றால் மண்டபத்தில்நடந்தது அதற்கான காரியங்கள் வீட்டில் நடந்தது. வழக்கு சொத்தின் வடமேற்கு பகுதியின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டிருந்தார்கள் என்றால் 15 வருடத்திற்குமுன் கொடுத்திருந்தார்கள் தற்போது இல்லை. எந்த தேதியில் வாடகைக்கு கொடுத்து எந்த தேதியில் முடிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. வாடகைக்கான முன்பணத்தை எனது மாமா கொடுக்து வாடகைதாரர்களை காலி செய்ய வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2 பெரியம்மாவும் எனது அம்மாவும் திருமணத்தின் பின்பு வழக்கு சொத்து வீட்டிற்கு வருவாய் வரிகளோ நகராட்சி வரிகளோ மற்ற செலவீனங்களோ செய்யவில்லை என்றால் சரியல்ல சொத்து வரி கட்டிய ரசீது உள்ளது. சொத்து வரி கட்டிய விவரத்தை எனது எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பாட்டி இறந்தபின்பு 1ம் வாதியின் கைவச

அனுபவத்தில் இருந்தது என்றால் சரி. வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீடு ஒரே கூரையின் கிழ் உள்ளது என்றால் சரியல்ல தனிதனியாக உள்ளது. தனிதனியாக பிரித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வள்ளியூர் நீதிமன்றத்தில்எனக்கு எதிராக சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. கிரிமினல் வழக்குகளில் போடுலீசார் என்னை பல வழக்ககளில் சாட்சியா பட்டியல் இட்டு நான்பலமுறை சாட்சியம் அளித்த அனுபவம் உண்டு என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை எனது அம்மாவோ எனது பெரியம்மாக்களோ அனுபவம் செய்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வாதி தாக்கல் செய்த 44 வழக்கு ஆவணங்களை படித்து பார்துள்ளேன். எனது நிருபண வாக்குமுலத்தின் 5 வது பாராவில் சொல்லியுள்ள வாய்மொழி பாகம் எந்த தேதியில் ஏற்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லையென்றால் சரிதான். எந்த தேதியில் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்றால் தெரியாது. எந்த இடத்தில் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்றால் எனது மாமா இசக்கியின் வீட்டில் நடந்தது. எனது மாமா வீட்டில் வாய்மொழி பாகம் நடந்தபோது நான் அங்கு இல்லை. வாய்மொழி பாகம் குறித்து பிரதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரி.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது)